# ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் சிறப்பு முகாம் தொடக்க விழா !

திருவள்ளூர்: ஏப்29—

பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் ஆறு நாட்கள் சிறப்பு முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது .

இதன் தொடக்கவிழாவில் ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர். திரு. பி.ஆர் ரமேஷ்பாபு அவர்கள் வரவேற்புஉரை நிகழ்த்தினார்.

அவரது உரை சமூக சேவை, சமூக பொறுப்பு, மற்றும் திறன் மேம்பாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் அமைந்தது.

மேலும் இச்சிறப்பு முகாமினை சிறப்பிக்க திருவள்ளூர் மாவட்ட துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. பாலமுருகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

மேலும் பெருமாள் பட்டு




பஞ்சாயத்து செயலாளர் திரு.எம்சிவகுமார், பெருமாள் பட்டு பஞ்சாயத்துயூனியன் பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு.எம். ராமசுப்பிரமணியன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

அனைத்து சிறப்பு விருந்தினரின் முன்னிலையில் இச் சிறப்பு முகாமானது தொடங்கிவைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 100 நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு, 6 நாள் சிறப்புமுகாமின் ஒருபகுதியாக கணினி மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்த பட்டறையில் பங்கேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இதனைத்தொடர்ந்துஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் வளாக இயக்குனர் திரு. பாலசுப்பிரமணியன், தலைமை விருந்தினர்களுக்கு நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார்.

மேலும் அவர்களின் வருகை மற்றும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு ஒருங்கிணைப்பாளர். திரு. ஏ.ராஜீவ், விருந்தினர்களை அறிமுகப்படுத்தி அவர்களின் சாதனைகள் மற்றும் பங்களிப்புகளை எடுத்துரைத்தார்.

ஆறுநாள்சிறப்பு முகாமில் பெருமாள்பட்டு மக்களுக்கு பயனளிக்கும் நோக்கில் சமூக சேவை, திறன் மேம்பாடு மற்றும் சமூக விழிப்புணர்வு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பல்வேறு மதிப்பு மிக்க திட்டங்கள் மற்றும் வளமான அனுபவத்தை எதிர்நோக்கும் வகையில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாட்டு நலப்பணி ஒருங்கிணைப்பாளர் திருமதி. எஸ். பவித்ரா நன்றி கூறி இவ்விழாவினை நிறைவு செய்தார்.